2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். இது 100—வது கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)*

100—

விளையாட்டு அரங்கம்

***5584—திரு. கே.சி. வீரமணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜோலார்பேட்டை தொகுதி, ஜோலார்பேட்டையிலுள்ள சிறு விளையாட்டு அரங்கத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை தொகுதி, ஜோலார்பேட்டையிலுள்ள சிறு விளையாட்டு அரங்கத்தைச் சீரமைப்பது தொடர்பாகக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2004—2005 புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியிலே, பல்வேறு எதிர்ப்புகளையெல்லாம் மீறி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய ஜோலார்பேட்டைக்கு*

ஒரு அழகான விளையாட்டரங்கத்தை உருவாக்கித் தந்தார்கள். அன்றாடம், கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்டோர் அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், அதற்குப் பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, அம்மா அவர்கள் எடுத்துவந்த திட்டம் என்பதனால், அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்து எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டிருந்த காரணத்தினால், அதன் வளர்ச்சிக்கு எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அம்மா அவர்களுடைய அரசுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த விளையாட்டு அரங்கத்தில், ஓர் உள் விளையாட்டரங்கம் (Indoor Stadium) மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தைக் கண்டிப்பாக அமைத்துத் தரவேண்டும். அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கண்டிப்பாகக் கேட்கிறார். கண்டிப்பாக உண்டா? (சிரிப்பு) மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலேதான், இந்த விளையாட்டுத் துறையை முதன்மைத் துறையாக உருவாக்க வேண்டும் என்று பல திட்டங்களையெல்லாம் தீட்டி, அதிலும் குறிப்பாக விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதற்காகப் பல கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்க ஆணையிட்டு அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள் பங்கு பெறும் வகையில், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக, அந்த மாவட்டத் தலைநகரங்களில் ஒரு வெளி விளையாட்டரங்கம், ஓர் உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளம் போன்ற மூன்றையும் உடனடியாக அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையிலே பல மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் எல்லாம் இப்போது நடைபெற்றுக்*

2012 ஏப்ரல் 16]

கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் நடைபெற்ற பின்பு, படிப்படியாக அந்த மாவட்டங்களில் உள்ள முக்கிய நகரங்களில், உள் கட்டமைப்பு வசதிகளையெல்லாம் கருத்திற்கொண்டு, உடனடியாக அந்த விளையாட்டரங்குகளை ஏற்படுத்த வேண்டும் என்ற அரசின் அடுத்த திட்டத்தையும் கருத்திற்கொண்டு இத்துறை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் வீரமணி அவர்கள் இதை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதிலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 100—ஆவது கேள்வி என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, எதையுமே இல்லையென்று சொல்வதில்லை. எத்தனை நெருக்கடிகள் இருந்தாலும், அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பது, குறிப்பாக விளையாட்டுத் துறையை முதன்மைப்படுத்த வேண்டும் என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முக்கிய குறிக்கோள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் வீரமணியின் கோரிக்கையை ஏற்று வருகிற நிதியாண்டில் ஜோலார்பேட்டை பகுதியிலே உள்ள விளையாட்டரங்கம் சீரமைப்பது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு அரசு உடனடியாகச் செயல்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாவது கேள்விக்குக் கிடைத்த வெற்றியாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*